**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**C.C.No.799/2025**

**Prosecution Witness :1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : அலெக்சிஸ் | **Caste** | : |
| **Father's Name** | : இன்னாசியார் | **Calling** | : பிட்டர் |
| **Village** | : மாரம்பாடி | **Religion** | : |
| **Taluk** | : வேடசந்தூர் | **Age** | : 33 |
| | | **Dated** | : **20.07.2026** |

**20.07.2026.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–1 திரு.**அலெக்சிஸ்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் தற்போது வேடசந்தூர் தாலுகா மாரம்பாடி கிராமத்தில் குடியிருந்து தனியார் மில்லில் பிட்டராக வேலை செய்து வருகிறேன்.என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் சொந்தவேலையாக திண்டுக்கல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் வழியாக செல்லும் போது காவலர்கள் ஒரு வெள்ளை பேப்பரில் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் அசா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

I. Alexis

**அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்னுடைய ஆதார் எண் மற்றும் புகைப்படத்தை ஆவணமாக கொடுத்து. வோடோபோன் மற்றும் ஏர்டெல் சிம் கார்டு பெற்று 7 வருடத்திற்கு மேல் பயன்படுத்தி வருகிறேன் என்றும். கடந்த 3 வருடங்களுக்கு முன்பு எனது ஆதார் எண்ணை பயன்படுத்தி எனது மனைவிக்கு வோடோபோன் சிம் கார்டு தாடிக்கொம்பு ரோடு கடை அருகே வாங்கினேன் என்றும். எனது ஆதாரை பயன்படுத்தி போலியான ஆவணம் தயார் செய்து. சிம்கார்டுகள் பெற்ற விபரம் போலிசார் என்னை விசாரித்தபோது தான் எனக்கு தெரிய வந்தது என்றும். பின்னர் எனது ஆதாரை பயன்படுத்தி மோசடி செய்து சிம் கார்டை விற்பனை செய்த நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு ஆன்லைன் மூலம் புகார் கொடுத்தேன் என போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது நானும் ஆஜர் எதிரியும் சமமாதானம் ஆகிவிட்டோம் என்பதால் அவருக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

I. Alins

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

Judicial Magistrate No.I

Dindigul.